# அறுந்துபோன - மோடியின் ஊழல் ஒழிப்பு ரீல்!

திருநெல்வேலியில் நடைபெற்ற பா.ஜ.க. கூட்டத்தில் பேசிய உள்துறை அமைச்சர் அமைச்சர் அமித்ஷா அவர்கள். பி.ஜே.பி.ஆட்சியின் பத்தாண்டுகால 'சாதனை'களைப் பட்டியலிட்ட "ஊழல், வாரிசு அரசியல் மற்றும் சமரச அரசியல்" ஆகியவற்றுக்கு எதிராகப் போராட வேண்டுமென்று பேசி உள்ளார்.

உண்மையில், அச்சமயத்தில் மோடியின் ஊழல் ஒழிப்பு ரீல் அறுந்து போய் பல நாட்கள் ஆகிவிட்டது..

பிபிசி ஆவணப்படம், ஹிண்டன்பர்க் அறிக்கை,ஒடிசா ரயில் விபத்து, மணிப்பூர் கலவரம், அமெரிக்காவிலும் மோடிக்கு எதிர்ப்பு. பாகிஸ்தான் உடன் தவறான போர் நிறுத்தம். ஒட்டு திருட்டு. விவசாயிகள் போராட்டம். இஸ்லாமியக் கிறிஸ்தவ மக்கள் மீது தாக்குதல். பங்குச்சந்தை முறைகேடு. விலைவாசி உயர்வு. வேலையில்லா திண்டாட்டம். நாடு முழுவதும் நீட் தேர்வில் முறைகேடு. 'வளர்ச்சி'யின் நாயகனாக முன்னி றுத்தப்பட்ட மோடி மற்றும் பா.ஜ.க. கட்சியின் பிம்பம் மக்கள் மத்தியில் சரிந்துவருவதால், 2026 சட்ட மன்றத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு என்ன செய்வதென்று தெரியாமல் வெறி பிடித்து பைத்தியக்காரத்தனமாக தன் நடவடிக்கைகளை அமைத்துக் கொள்கிறது, மோடி அரசு.. ராகுல் காந்தி அவர்களை பிரதமர் ஆக்க விடமாட்டேன் என்றும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆக உதயநிதி ஸ்டாலினை அமர விடமாட்டேன் என்றும் இந்தியாவின் உள்துறை அமைச்சர் அமித்ஷா திருவாய் மலர்ந்திருக்கிறார் இந்தியாவின் மிக பலமான கட்சி. 14 மாநிலங்களில் ஆட்சி செய்கிற கட்சி அந்த கட்சியின் தலைவர் உள்துறை அமைச்சர் தி.மு.க. இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினை பார்த்து அஞ்சுகிற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பது அவருடைய அந்த பேச்சின் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

மோடி ஆட்சியில் பல்வேறு துறைகள் மற்றும் பல்வேறு திட்டங்களில் நடைபெற்ற ஊழல், முறைகேடுகளை அம்பலப்படுத்தி, மோடியின் ஊழல் ஒழிப்பு அரிதாரத்தைக் கலைத்திருக்கிறது சி.ஏ.ஜி. அறிக்கை. அரிதாரம் கலைந்த பிறகும், ஊழல் ஒழிப்பு ரீல் அறுந்த பிறகும், "ஊழலை ஒரு போதும் இந்தியா சகித்துக் கொள்ளாது" என்று திருநெல்வேலி பி.ஜே.பி.மாநாட்டில் வீரவசனம் பேசுவதற்கு எத்துணை நெஞ்சுரம் வேண்டும்?

**ஒன்றிய பிஜேபி அரசின் முகத்திரையை கிழித்த சி.ஏ.ஜி. அறிக்கையின் சாரம்**

பாரத் மாலா பரியோஜனா திட்டத்தின் கீழ் தேசிய நெடுஞ்சாலைகள் அமைப்பதற்குத் திட்டமிட்ட தொகையான கிலோ மீட்டருக்கு 15.37 கோடி ரூபாய்க்குப் பதிலாக அதைவிட இரண்டு மடங்கு அதிகமாக செலவிடப்பட்டிருக்கிறது. மேலும், திட்டமிட்ட தொலைவான 34,000 கிலோமீட்ட ருக்குப் பதிலாக 13,499 கிலோமீட்டர் மட்டுமே சாலை அமைக்கப்பட்டுள்ளது. முதல்கட்டமாக ரூ.5,35,000 கோடி ஒதுக்கப்பட்டதில் பெரும்பகுதி தொகை முறைகேடு செய்யப்பட்டிருப்பதாகக் கூறுகிறது அறிக்கை.

டெல்லியின் துவாரகாவையும், ஹரியானாவின் குர்கானையும் இணைக்கக்கூடிய வகையில் 29.6 கி.மீ நீளத்திற்கு 16 வழிச்சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. குறைவான மக்கள் பயணிக்கும் இந்தச் சாலையை எட்டுவழிச் சாலையாக அமைப்பதே வீண் செலவு என்று அறிக்கை தெரிவித்துள்ளது. இதுமட்டுமின்றி, திட்டத் தொகையைவிட 14 மடங்கு அதிகமாக செலவிடப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவின் நான்கு மாநிலங்களில் உள்ள 41 சுங்கச் சாவடிகளை வகை மாதிரியாக எடுத்து ஆய்வு செய்ததில் பல கோடி ரூபாய் முறைகேடுகள் நடந்திருப்பதாக சி.ஏ.ஜி.அறிக்கை விளக்குகிறது.

ஒன்றிய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்தில் பல்வேறு ஊழல்கள் நடைபெற்றிருப்பதாக சி.ஏ.ஜி. அம்பலப்படுத்துகிறது.

மகாராஷ்டிராவில் 2.25 லட்சம் பேர் மருத்துவமனையில் இருந்து குணமாகி சென்ற தேதிக்குப் பிறகு அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த முறைகேட்டின் பெரும்பகுதி பா.ஜ.க.வின் 'இரட்டை எஞ்ஜின் அரசு' ஆளும் மாநிலமான மகாராஷ்டிராவில்தான் நடந்தேறியுள்ளது.

கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் வழங்கப்படுகிற தேசிய சமூக உதவித் திட்டத்தில் முறைகேடு நடந்திருக்கிறது என்பது அம்பலமாகியிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் வயதானவர்கள், கைம்பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இது ஐந்து வகையான திட்டங்களின் மூலம் வழங்கப்படுகிறது. பொதுவாக ஓ.ஏ.பி என்ற பெயரில் வழங்கப்படும் முதியோர்களுக்கான நிதி உதவித் தொகை, ஓ.ஏ.பி. பயனாளர்களுக்கான உணவுப் பாதுகாப்புத் திட்டமான அன்னபூர்ணா திட்டம், கைம்பெண் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித் தொகை மற்றும் ஒருமுறை மட்டும் வழங்கப்படுகிற வீட்டில் முதன்மை வருமானம் ஈட்டுபவரை இழந்த குடும்பத்தி ற்கான உதவித் தொகை என செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை வேறு திட்டங்களின் விளம்பரங்களுக்கு செலவு செய்ததன் மூலம், இத்திட்டம் குறித்த தகவல் தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு கொண்டு சேர்க்கப்படவில்லை. இதனால், தகுதி வாய்ந்த பயனாளர்கள் இத்திட்டத்தில் சேர முடியவில்லை. சாரம்சத்தில், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களை மேலும் வறுமையிலும், பட்டினியிலும் தள்ளியிருக்கிறது பாசிச மோடி அரசு.

உத்திரபிரதேசத்தில் ஒன்றிய அரசின் ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ், அயோத்தி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அயோத்தி திட்டமானது இராமாயண கதை நிகழ்வு இடங்களை ஒருங்கிணைக்கின்ற சுற்றுலா திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் ஆறு மாநிலங்களில் ஆறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் ஒவ்வொரு அங்கங்களிலும் ஒப்பந்ததாரர்களுக்கு ஏலம் விடுவது, நிதி ஒதுக்கீடு ஆகிய அனைத்திலும் முறைகேடுகள் நடந்திருப்பதாகவும் உத்திரப் பிரதேசம் இதில் முதலிடத்தில் இருப்பதாகவும் அறிக்கை கூறுகிறது.

**மோர்பி பால ஊழல்! வியாபம் ஊழல்!**

குஜராத்தில் மோர்பி பாலப் பாராமரிப்புப் பணியை கடிகார நிறுவனமான ஒரோவாவிற்கு ஒப்படைத்ததில் ஊழல் நடைபெற்றிருக்கிறது. இதனால் 140க்கும் அதிகமான மக்கள் இந்த பாலம் திறக்கப்பட்ட போது உயிரிழந்திருக்கின்றனர்.

பா.ஜ.க. ஆட்சியில் மத்தியப் பிரதேசத்தில் நடந்த வியாபம் ஊழலும், கர்நாடகாவில் கடந்த பா.ஜ.க. ஆட்சியின் போது நடந்த நில பேர ஊழலும், பெல்லாரி ரெட்டி சகோதரர்களின் சுரங்க ஊழலும் பா.ஜ.க.வின் யோக்கியதையை அம்பலப்படுத்தும் பழைய புராணங்கள். இனி உத்தமர் மோடி ஆட்சியில் நடந்து வரும் புதிய ஊழல் புராணத்திற்கு வருவோம்.

கர்நாடக மாநிலத்தில் முன்னாள் முதலமைச்சர் எடியூரப்பா பாஜக அமைச்சர் ஈஸ்வரப்பா ரெட்டி சகோதரர்கள்.மீது ஊழல் குற்ச்சாட்டுக்கள்..

**அசாம்: பா.ஜ.கவின் பசு மாட்டு ஊழல்!**

அசாம் மாநில பா.ஜ.க அரசு பால் பண்ணை திட்டத்தின் மூலம் மிகப்பெரிய ஊழலில் ஈடுபட்டுள்ளது தகவல் அறியும் உரிமை சட்டத்தின் (Right to Information - RTI - Act) மூலம் சமீபத்தில் அம்பலமாகியுள்ளது. இதற்கு அம்மாநில எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

அரசு பொதுத்துறை நிறுவனமான ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல் லிமிடெட் (எச்.ஏ.எல்)இல், கடந்த 2012 ஆம் ஆண்டு ரூ.441.41 கோடி செலவில் எரிவாயு எஞ்ஜின் (Gas turbine engine) வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் பெரும் பகுதியை உரிய காலத்தில் முடிக்காமல் இழுத்தடித்த வகையில் 153 கோடி ரூபாய் அரசுக்கு நட்டம் ஏற்பட்டிருப்பதாக அறிக்கை கூறுகிறது.

மோடி அரசால் கடந்த 2016ஆம் ஆண்டு உள்நாட்டு விமானச் சேவையை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டதுதான் உதான் (UDAN) திட்டம். இத்திட்டத்தின் அடிப்படையில், மார்ச் 2021க்குள் 774 வழித்தடங்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டது. திட்டமிட்ட மூன்று ஆண்டுகளில் வெறும் 112 வழித்தடங்கள் மட்டுமே நிறைவு பெற்றிருக்கின்றன. இந்த 112 வழித்தடங்களில் வெறும் 54 வழித்தடங்கள் மட்டுமே 17 வட்டார விமான நிலையங்களுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், 116 விமான நிலையங்கள், வானூர்தி தளம் (Heliports), நீர் வானூர்தி தளம் (Water aerodromes) உருவாக்க செலவு செய்ததில் வெறும் 71 நிலையங்களில் மட்டுமே செயல்பாடுகள் தொடங்கப்பட்டன என்கிறது அறிக்கை. இவற்றில் எல்லாம் பல நூறு கோடி ரூபாய் ஊழல் நடந்திருப்பதை விரிவாகப் பட்டியலிட்டிருக்கிறது.

சி.ஏ.ஜி., இந்த அறிக்கையை மட்டுமின்றி, ஒன்றிய அரசின் மறைமுக வரிகள்சுங்க வரிகள் குறித்து தணிக்கை அறிக்கையையும் வெளியிட்டிருக்கிறது. இதில், இந்திய சுங்க மின்னணு தரவு மாற்று அமைப்பின் (ICES) தகவல் தொழில்நுட்பம் குறித்து தணிக்கை செய்யப்பட்டிருக்கிறது. டிசம்பர் 2020 முதல் மே 2022 வரையிலான தணிக்கை அறிக்கை என்றாலும், 2015 முதல் 2020 வரையிலான காலகட்டத்தை உள்ளடக்கியே தணிக்கை செய்யப்பட்டிருக்கிறது. இதில் சுங்க வரி வசூலிப்பதில் தவறுகள் நடைபெற்றிருப்பதை இவ்வறிக்கை விளக்குகிறது.



**சைதை சாதிக்**
**தலைமைக் கழகப் பேச்சாளர்**

2017-18 முதல் 2020-21 வரையிலான காலத்தில், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் அமைச்சகத்தின் செயல்பாடுகள் குறித்து தணிக்கை செய்திருக்கிறது, சி.ஏ.ஜி. இந்த அமைச்சகத்தின் கீழ் செயல்படும் காதி மற்றும் கிராமப்புற தொழில் ஆணையத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 92 துறைசார் வர்த்தக அலகுகளில் மார்ச் 3, 2021 நிலவரப்படி வெறும் 18 அலகுகள் மட்டுமே செயல்பாட்டில் உள்ளன. ஏற்கனவே உருவாக்கப்ப ட்டிருந்த பல அலகுகள் செயல்படாத நிலைக்கு தள்ளப்பட்டு மூடப்பட்டுள்ளன.மொத்தமாகவே வெறும் 20 சதவிகிதத்திற்கும் குறைவான அலகுகள்தான் தொடர்ந்து செயல்படும் நிலையில் உள்ளன.

ரயில்வே நிதி விவகாரம், துவாரகா விரைவுப் பாதை, உதான் திட்டம், பாரத் மாலா திட்டம், ஆயுஷ்மான் பாரத், அயோத்தி மேம்பாட்டுத் திட்டம் என அனைத்திலும் திட்டமிட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தாண்டி அதிகமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. இறந்தவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்ததாக பொய் கணக்குகாட்டி மக்களின் பணம் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. சாலை அமைக்க, திட்டமிட்ட தொகையைவிட 14 மடங்கு அதிகமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமா? வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைகளுக்கு சென்று சேர வேண்டிய நலத்திட்டங்களுக்கான நிதி வேறு திட்டங்களின் விளம்பரத்திற்கு செலவிடப்பட்டிருக்கிறது. இதனால் எத்தனை ஆயிரம் மக்களின் அன்றாட உணவு உரிமை பறிக்கப்பட்டிருக்கும்?

**பி.எம்.கேர்ஸ் ஊழல்!**

கொரோனா காலத்தில், "பி.எம். கேர்ஸ்" என்ற பெயரில் பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து நிதி திரட்டப்பட்டது. இதுவரை 2,900 கோடி ரூபாய் திரட்டப்பட்டிருக்கிறது. ஆனால் இதற்கான முறையான வரவு செலவு கணக்கு இல்லை. மேலும், இது ஒரு அறக்கட்டளை என்பதால் தணிக்கைக்கு உட்படுத்த முடியாது என உச்சநீதிமன்றத்தில் வாதிட்டது மோடி அரசு. ஆக, ரூ.2,900 கோடி என்னவானது என்பது இன்னும் கேள்வியாகவே இருக்கிறது.

மோடி முதல்வராக இருந்த போது, சுமார் நானூறு கோடி மதிப்பிலான மீன் பிடி ஒப்பந்தம் முறையான டெண்டர் இல்லாமல் வேண்டியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

சுமார் 6,237.33 கோடி மதிப்பில் 2003 ம் ஆண்டு குஜராத்தில் செயல்படுத்தப்பட்ட சுஜலாம் சுபலாம் யோஜனா என்கிற திட்டத்தில் சுமார் 500 கோடி அளவுக்கு மோசடி நடந்திருப்பதை குஜராத் சட்டமன்றப் பொதுக் குழுவே அம்பலப்படுத்தியது.

குஜராத் மாநில பெட்ரோல் கார்ப்பரேஷனுக்கு (GSPC) சொந்தமான பிபாவாவ் மின் உற்பத்தி நிலையத்தை ஸ்வான் எனர்ஜி நிறுவனத்திற்கு எந்த டெண்டரும் கோராமல் 381 கோடி ரூபாய் அடிமாட்டு விலைக்கு அள்ளிக் கொடுக்கப்பட்டுள்ளது.

மத்திய கணக்குத் தணிகை அதிகாரியின் அறிக்கைப்படி மோடி முதல்வராக இருந்த காலத்தில் போர்டு, எல்&டி, அதானி, எஸ்ஸார் மற்றும் ரிலையன்ஸ் நிறுவனங்களுக்கு 580 கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடாக சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது.

ஆனந்தி பென் பட்டேலின் மகளுக்கு குஜராத் கிர் காடுகளுக்கு அருகில் உள்ள சுமார் 145 கோடி மதிப்பிலான 245 ஏக்கர் நிலம் வெறும் 1.5 கோடிக்கு வழங்கப்பட்டுள்ளது. சுமார் 16,000 ஏக்கர் நிலத்தை ஒரு சதுர மீட்டர் 32 ரூபாய் விலைக்கு அதானி நிறுவனத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிலத்தின் சந்தை மதிப்பு, ஒரு சதுர மீட்டருக்கு 6000 ரூபாய்!. இதனால் குஜராத் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு 6,546 கோடி.

"ஒரே ஒரு எஸ்.எம்.எஸ்" மூலம் குஜராத்துக்கு அழைத்து வரப்பட்ட ரத்தன் டாடாவின் நானோ கார் தொழிற்சாலைக்கு குஜராத் அரசு வழங்கிய மொத்த சலுகைகளின் மதிப்பு 33,000 கோடி. இதில் 1100 ஏக்கர் நிலம், சதுர மீட்டர் 900 ரூபாய் மதிப்புக்கு சல்லி விலைக்கு தூக்கிக் கொடுக்கப்பட்டது. மேலும் இண்டி கோல்ட் ரிபைனரிஸ் நிறுவனத்துக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் 40 கோடி இழப்பு.

ஊழலுக்கு எதிராக பா.ஜ.க. முன்னெடுக்கும் நடவடிக்கைகளோ ஊழலை ஒழிக்கவேண்டும் என்ற தார்மீக நோக்கத்தின் அடிப்படையில் எடுக்கப்படுவதில்லை. மாறாக, நேரடி அரசியல் எதிரிகளைப் பழி தீர்த்துக் கொள்ள வேண்டும், எதிர்க்கட்சிகளை அடக்கி வாசிக்க வைக்க வேண்டும் என்ற சுயநல நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களை சிறை வைக்கும் மோடியின் சி.பி.ஐ.யும் அமலாக்கத்துறையும் எடப்பாடியையும், அதிமுக முன்னாள் அமைச்சர்களை கண்டுகொள்ளாமல் இருப்பதற்குக் காரணம் பிஜேபியின் சுயநலம்தான்.

**எடப்பாடி அரசின் ஊழல்!**

தமிழ்நாட்டில் கூவத்தூரில் தொடங்கிய எடப்பாடி அரசின் ஊழல்களும் முறைகேடுகளும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து தினமும் அம்பலப்படுத்தி செய்திகள் வெளிவராத நாட்களே இல்லை. இன்று இருந்த நிலையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் அவர்களோடு கூட்டணி வைத்தது.

இவை தவிர, பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு முட்டை வாங்கியதில் ஊழல், அரசு அதிகாரிகள் பணியிட மாற்றம், பதவி உயர்வில் ஊழல், சூரிய ஒளி மின்சாரம் தயாரிப்பதில் ஊழல், போக்குவரத்துத் துறையையே முற்றிலும் முடக்கிப் போட்டுள்ள போக்குவரத்து ஊழல், அரசு கட்டிடங்களுக்கு முறுக்குக் கம்பி வாங்கியதில் ஊழல், ஏரி மணல் அள்ளுவதில் ஊழல் என திரும்பிய பக்கமெல்லாம் ஊழல் செய்து தமிழகத்தையே கொள்ளையடித்து அ.தி.மு.க. இந்தக் கொள்ளைக்கூட்டத்தோடு கூட்டணி கட்டிக்கொண்டிருக்கும் அமித்ஷா,

இந்த ஊழல்கள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எதுவுமில்லை. அ.தி.மு.க.விற்கு எதிராகப் பதியப்பட்ட வழக்குகளோ, ஒன்று ஊறுகாய்ப் பானைக்குள் உறங்குகின்றன; அல்லது குற்றவாளிகளுக்கு விசாரணை அமைப்புகளே நற்சான்றிதழ் கொடுத்து அவ்வழக்குகளை ஊத்தி மூடிவிடுகின்றன. அதே ஊழல் அதிமுகவுடன் வைத்திருக்கிறார்

2016ஆம் ஆண்டு சென்னை நகரில் பல இடங்களில் சோதனை நடத்திய வருமான வரித்துறையினர், சுகாதாரத்துறை அமைச்சர் விஜய பாஸ்கர், அப்போதைய போலீஸ் டி.ஜி.பி. ராஜேந்திரன் மற்றும் சென்னை போலீஸ் கமிசனர் ஜார்ஜ் உள்ளிட்டவர்களுக்கு குட்கா ஊழலில் தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்களைக் கண்டுபிடித்து வழக்குப் பதிவு செய்தது. அவ்வழக்கு தற்போது சி.பி.ஐ. வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. விசாரணை என்ற பூச்சாண்டியைத் தாண்டி அந்த வழக்கில் இதுவரை எவ்வித முன்னேற்றமும் நடந்துவிடவில்லை.

காங்கிரசு அரசு 2ஜி அலைக்கற்றைகளைக் குறைந்த விலைக்கு விற்றதை ஊழல் எனச் சாடும் மோடி, தனது அரசு ரஃபேல் போர் விமானங்களை அதிக விலை கொடுத்து வாங்கியதைத் தேசப் பாதுகாப்பு என நியாயம் கற்பிக்கிறார். மாமியார் உடைத்தால் மண் குடமாம், மருமகள் உடைத்தால் பொன்குடமாம். ரஃபேல் கொள்முதல் தொடர்பான வழக்கின் கோப்புகள் காணாமல் போனது வேறு கதை ..

**'ஆயுஷ்மான் பாரத்' திட்டத்தில் அகோர ஊழல்!**

தேர்தலைக் கருத்தில் கொண்டு 2018ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி ஆயுஷ்மான் பாரத் என்ற பெயரில் மருத்துவக் காப்பீடு திட்டம் அறிவித்து, அதை வைத்து வெற்றியும் பெற்றார். அந்த மருத்துவ திட்டத்தில் மக்களின் பெயரால் மருத்துவ நிறுவனங்களும், மந்திரிமார்களும் தான் பலன் அடைந்துள்ளனர்

அசாம் மாநில அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்திய தகுதித் தேர்வில் முறைகேடுகள் செய்து பதவியை அடைந்ததற்காக 19 பேர், கடந்த 18 ஜூலை 2018 அன்று அசாம் போலீசால் கைது செய்யப்பட்டனர். முறைகேடுகளில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டவர்களில் அசாம் மாநில தேஜ்பூர் தொகுதியின் *பாஜக எம்.பி. ஆர்.பி.சர்மாவின் மகளும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது

**துவாரகா விரைவுப் பாதை கட்டுமான ஊழல்!**

துவாரகா விரைவுப் பாதை கட்டுமானத்தில், ஒப்பந்ததாரர் தேர்வு முதல் இறுதி வரை ஊழலோ ஊழல்! எங்கே சாலை போடுவதென நிலத்தை கையகப்படுத்தாமலே ஒப்பந்த பணிகள் கொடுத்த ஆட்சி இதுவாகத் தான் இருக்கும்.ஒரு கிலோ மீட்டருக்கு திட்டச் செலவு என்பது 18 கோடி ரூபாய் தான்! ஆனால், 250 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது ஏன் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. நாட்டின் முதல் எட்டு வழி விரைவு சாலையான துவாரகா பாதை சுமார் 9,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்ப ட்டது. ஹரியானாவில் 18.9 கிலோ மீட்டர் தூரத்திற்கும் தில்லியில் 10.1 கிலோ மீட்டர் தூரத்துக்குமான இத்திட்டத்தில் ஒரு கிலோ மீட்டர் சாலையை அமைக்க தாராள மதிப்பீடாக 18 கோடி ஆகும் என்று முடிவு செய்திருந்த சூழலில் அதிரடியாக அது ஒரு கிலோ மீட்ட ருக்கு 250 கோடி ரூபாய் என அதிகரித்து கணக்கு காட்டப்பட்டுள்ளது. அதாவது, திட்ட மதிப்பீட்டை விடவும் பல மடங்கு உயர்த்தி காட்டப்பட்டது 10 சதவிதம், 20 சதவிகிதமல்ல, 1,400 சதவிகிதம்! இது நினைத்துப் பார்க்கவே முடியாத, யாரும் செய்யக் கூசும் ஊழலாகும். இது வரை இந்திய நெடுஞ்சாலைத் துறையில் திட்ட மதிப்பை விடவும் 14 மடங்கு உயர்த்தி கணக்கு எழுதி, பணத்தை அள்ளும் களவாணித்தனத்தை எவரும் செய்யத் துணிந்ததில்லை!

ஹெச்.ஏ.எல். என அழைக்கப்படும் இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் பொதுத் துறை நிறு வனத்தில் சென்ற ஆட்சி காலத்திலேயே சட்ட விரோதமாக ஒப்பந்தாரார்களுக்கு பணம் தந்த வகையில் 13.28 கோடி ஊழல் செய்ததாக சி.ஏ.ஜி அறிக்கை தந்து 2019ல் மோடி அரசு அவமானப்பட்டது. ஹெச்ஏஎல் விமான எஞ்சின் வடிவமைப்பில் கோளாறு செய்த வகையில் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது., தவறான திட்ட வடிவமைப்பு கோளாறுகள், உற்பத்தியில் தாமதம் உள்ளிட்ட பல்வேறு கார ணங்களால் சுமார் ரூ.159.23 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாக சிஏஜி அறிக்கை யில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**போலி நிறுவன ஊழல்!**

சத்தீஸ்கரில் ஆட்சியில் இருந்த ராமன் சிங் தலைமையிலான பாஜக அரசு, வரி ஏய்ப்பு சொர்க்கமான பிரிட்டீஷ் வெர்ஜீனியா தீவுகளில் ஒரு நிறுவனத்துக்கு அகஸ்டா வெஸ்ட்லெண்ட் ஹெலிகாப்டர்கள் வாங்க 1.57 மில்லியன் டாலரை 'கமிஷன்' தந்ததாக குற்றம்சாட்டப்பட்டது. இந்த சர்ச்சையில் முதலமைச்சரின் மகன் அபிஷேக் சிங்கும் பேசப்பட்டார். 6.3 மில்லியன் டாலர் மதிப்பிலான ஹெலிகாப்டரை வாங்கிய பிறகு, இவர் ஒரு போலி நிறுவனத்தை தொடங்கியதாகவும் குற்றம்சாட்டப்பட்டது.

**தற்போது நாம் பாஜக வாஷிங் மெஷின் மூலம் சலவை செய்யப்பட்டுள்ளவர்களின் பட்டியலைப் பார்ப்போம்:**

**சாரதா ஊழல் செய்த அசாம் முதலமைச்சர் ஹிமந்த பிஸ்வா சர்மா , மகாராஷ்டிரா துணை முதலமைச்சர் பாசன ஊழல் செய்த அஜித் பவார்,**

**மத்திய பிரதேசம் முன்னாள் முதலமைச்சர் தற்போதைய ஒன்றிய அமைச்சர் வியாபம் ஊழல் செய்த சிவராஜ்சிங் சௌகான் அஷோக் சவான்**

1999 ஆம் ஆண்டு கார்கில் போரில் மரணித்தவர்களின் மனைவிகளுக்காக கட்டப்பட்ட ஆதர்ஷ் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் 31 மாடி கட்டிடத்தின் கட்டுமானத்தில் ஊழல் செய்துள்ளதாக அஷோக் சவானும் அவரது குடும்ப உறுப்பினர்களும் குற்றம் சாட்டப்பட்டனர். அமலாக்கத்துறையானது (ED) இந்த ஊழலை விசாரித்து வந்தது.

அவருக்கு போட்டியிட சீட் தந்தபோது மார்ச 2014இல் "வெட்கங்கட்ட காங்கிரஸ்" என்று விமர்சனம் செய்த மோடி தான், தற்போது அஷோக் சவானை மாநிலங்களவை உறுப்பினராக ஆக்கியுள்ளார். அவரை நட்சத்திர பிரச்சாரகர் என்றும் அறிவித்துள்ளார். அமலாக்கத் துறையும் அவரைக் கண்டுகொள்ளவில்லை.

**பாபா சித்திக் :** 2017 ஆம் ஆண்டில், குடிசை மறுவாழ்வுத் திட்டம் தொடர்பான நில ஒப்பந்த மோசடி வழக்கில் பாபா சித்திக் தொடர்புடைய வளாகங்களில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது.

இதனால் பாஜக கூட்டணியில் உள்ள அஜித் பவாரின் தேசியவத காங்கிரஸ் கட்சியில் சேர்வதற்காக சித்திக், காங்கிரஸ் கட்சியில் இருந்து ராஜினாமா செய்தார். அமலாக்கத்துறையும் தனது வேகத்தைக் குறைத்துக்கொண்டது.

**சாகன் புஜ்பால் :** சரத் பவாரின் தேசியவத காங்கிரஸ் கட்சியில், மாநில பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த போது, 2006ஆம் ஆண்டு, மூன்று திட்டங்களுக்காக 100 கோடி ரூபாய்க்கு மேல் ஒப்பந்தம் வழங்கியதில் முறைகேடு நடந்ததாக, புகார் எழுந்தது. இதனால் அமலாக்கத்துறையால் பணமோசடி வழக்கு இவர் மீது பதிவு செய்யப்பட்டு, 2016 ஆம் ஆண்டில் சாகன் புஜ்பால் கைது செய்யப்பட்டார்.

**யாமினி ஜாதவ் :**

பிரஹன்மும்பை முனிசிபல் கார்ப்பரேஷனின் (பிஎம்சி) நிலைக்குழுவின் முன்னாள் தலைவரான யஷ்வந்த் ஜாதவின் மனைவியும், சேனாவின் முக்கிய MLAவுமான யாமினி ஜாதவ், அன்னிய செலாவணி மேலாண்மைச் சட்டத்தை (ஃபெமா) மீறியதாகக் கூறப்படும் வழக்கில் அமலாக்கத்துறையின் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டனர்.

யாமினி ஜாதவ், சிவ ஷேனா கட்சியின் - ஷிண்டே முகாமில் சேர்ந்த பிறகு அவர் மீதும் அவரது கணவர் மீதும் அமலாக்கத்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**ஹசன் முஷ்ரிப் :**

மார்ச் 2023 இல், பணமோசடி வழக்கு தொடர்பாக மும்பை மற்றும் கோலாப்பூரில் உள்ள முஷ்ரிப்பின் வீடு மற்றும் அலுவலகங்களில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது.

ஜூலை 2023 இல், அஜித் பவார் தேசிய காங்கிரஸ் கட்சியை உடைத்து பாஜகவுடன் கைகோர்க்க முடிவு செய்தபோது, முஷ்ரிப்பும் அவருடன் சென்றார். அதன்பிறகு, அவரது வீட்டில் அமலாக்கத்துறை விசாரணையோ அல்லது சோதனையோ நடத்தவில்லை.

**பிரதாப் சர்நாயக் :**

2021 இல் 5,600 கோடி மதிப்பிலான நேஷனல் ஸ்பாட் எக்ஸ்சேஞ்ச் லிமிடெட் (என்எஸ்இஎல்) ஊழல் தொடர்பாக பிரதாப் சர்நாயக் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது அமலாக்கத்துறை விசாரணை நடைபெற்றது.

ஜூன் 2022 இல், தாக்கரே முகாமுக்கு எதிராக ஏக்நாத் ஷிண்டே பாஜகவுடன் கைகோர்க்க முடிவு செய்தபோது, அதில் ஒருவராக பிரதாப் சர் நாயக் இருந்தார்.

பிரதாப் சர்நாயக், ஏக்நாத் ஷிண்டே பிரிவினருடன் சென்றவுடன், அமலாக்கத்துறை அவர் மீதான விசாரணையை மட்டுப்படுத்திக் கொண்டது.

**பாவனா கவாலி:**

2020 ஆம் ஆண்டில், மகாராஷ்டிராவின் யவத்மால்வாஷிம் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கவாலி, உத்கர்ஷா பிரதிஸ்தான் என்ற பொது அறக்கட்டளையில் இருந்து ரூ.7 கோடியை முறைகேடாகப் பயன்படுத்தியதாக அமலாக்கத்துறை குற்றம் சாட்டியது.

இருப்பினும், ஜூலை 2022 இல், பாவனா கவாலி ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனா அணியில் சேர்ந்தார். அங்கு அவர் மக்களவை தலைமைக் கொறடாவாக அறிவிக்கப்பட்டார்.

அதன்பிறகு அமலாக்கத்துறை கூடுதல் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யவில்லை. விசாரணைக்கான சம்மனைக் கூட அவருக்கு அனுப்பப்படவில்லை.

**கிருபா சங்கர் சிங் :** காங்கிரஸின் மகாராஷ்டிர அரசாங்கத்தில் அமைச்சராக கிருபா சங்கர் சிங் இருந்தபோது அவர் மீது 230 கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் ஈட்டியதாக மத்திய புலனாய்வு அமைப்புகளால் கிருபா சங்கர் சிங் விசாரிக்கப்பட்டு வந்தார்.

2021 ஆம் ஆண்டு அவர் பா.ஜ.க.வில் இணைந்ததைத் தொடர்ந்து, அவர் பாஜகவின் மாநிலத் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

**திகம்பர் காமத் :** முன்னாள் முதல்வர் திகம்பர் காமத் மற்றும் மாநில பொதுப்பணித்துறையின் முன்னாள் அமைச்சர் சர்ச்சில் அலெமாவோ ஆகியோர் லஞ்ச வழக்கில் குற்றம் சாட்டப்பட்டனர். இந்த வழக்கு முதலில் சிபிஐயால் கையாளப்பட்டது பிறகு அமலாக்கத்துறைக்கு மாற்றப்பட்டது.

திகம்பர் காமத் மற்றும் அவரது அமைச்சர் சர்ச்சில் அலெமாவோவுக்கு எதிராக 2015 இல் தொடங்கிய விசாரணை 2021 இல் தீவிரமடைந்தது. அதன் பிறகு செப்டம்பர் 2022 இல், திகம்பர் காமத் காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் சிலருடன சேர்ந்து பா.ஜ.க.வுக்குச் சென்றுவிட்டார்.

**ஆந்திரப் பிரதேசம் :**

**. சி.எம். ரமேஷ் மற்றும் 12. ஒய்.எஸ்.சௌத்ரி**

2021 இல் சி.எம். ரமேஷ் மற்றும் ஒய்.எஸ்.சௌத்ரி பா.ஜ.க.வில் இணவதற்கு முன்பு வருமான வரித்துறை, அமலாக்கத்துறை ஆகியவற்றின் கண்காணிப்பில் இருந்தனர். இவர்கள் இருவரும் தெலுங்கு தேசம் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**மேற்கு வங்காளம் - . சுவேந்து அதிகாரி**

2017 இல், சுவேந்து அதிகாரி திரிணாமுல் காங்கிரஸில் (டிஎம்சி) இருந்தபோது, நாரதா ஸ்டிங் ஆபரேஷன் வழக்கு தொடர்பாக அவருக்கு பலமுறை அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியது.

அதன் பிறகு 2020இல் சுவேந்து அதிகாரி பாஜகவில் இணைந்தார். 2021 சட்டசபை தேர்தலில் முதல்வர் மம்தா பானர்ஜியை எதிர்த்து நந்திகிராம் தொகுதியில் வெற்றி பெற்றார். தற்போது மேற்கு வங்க சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக உள்ளார் சுவேந்து அதிகாரி.

**. தேபாஷிஷ் தார்**

வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்த வழக்கு தொடர்பாக தேபாஷிஷ் தார் மீது 2022 இல் மாநில சிஐடி அதிகாரிகள் சோதனை நடத்தினர். இதையடுத்து அவர் மீதும், ரோஸ் வேலி சிட் ஃபண்ட் ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட தொழிலதிபர் சுதிப்தா ராய் சவுத்ரி மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

சமீபத்தில் தனது பணியை ராஜினாமா செய்த மேற்கு வங்க முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி தேபாஷிஷ் தார், பிர்பும் தொகுதியில் பாஜக வேட்பாளராக தற்போது நிறுத்தப்பட்டுள்ளார்.

**ஹரியானா - நவீன் ஜிண்டால்**

ஜார்கண்ட் மற்றும் மத்தியப் பிரதேசத்தில் நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக நவீன் ஜிண்டால் மீதான மூன்று வழக்குகள் சிபிஐ மற்றும் அமலாக்கத்துறை ஆகியவற்றின் கண்காணிப்பில் இருந்தது.

ஆனால் தற்போது காங்கிரஸ் கட்சியின் முன்னாள் எம்.பி.யும் தொழிலதிபருமான நவீன் ஜிண்டால் கடந்த வாரம் பா.ஜ.க கட்சியில் இணைந்த சில மணி நேரங்களிலேயே ஹரியானாவின் குருஷேத்ரா தொகுதியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

தேர்தல் பத்திரங்களின் டாப் பத்து நன்கொடையாளர்களில் ஜிண்டால் குழுமமும் உள்ளது. இதுவரை 202 கோடி ரூபாய் மதிப்பிலான தேர்தல் பத்திரங்களை ஜிண்டால் குழுமம் வாங்கியுள்ளது.

**ஜார்கண்ட் கீதா கோடா**

நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு வழக்கில் ஊழல் மற்றும் சதி செய்ததாக குற்றம்சாட்டப்பட்டு 2017ஆம் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்ட ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் மது கோடாவின் மனைவி தான் கீதா கோடா.

ஜார்கண்ட் மாநிலத்தில் இருந்த காங்கிரஸ் கட்சியின் ஒரே எம்.பி.யான கீதா கோடா கடந்த மாதம் பா.ஜ.க.வில் இணைந்தார்.

**மேடைக்கு மேடை திமுக ஆட்சியை ஊழல் சகாப்தம் என்று விமர்சிக்கிற அமித்ஷாவின் ஒன்றிய பா.ஜ.க. வின் 11 ஆண்டு கால ஆட்சியும் ஊழல் ராஜ்ஜியம்தான்.**